செ.வெ.எண்: 532/2021 நாள்: 15.11.2021

**திருப்பத்தூர் மீனாட்சி அரசு மேல்நிலை பள்ளியில் மின்னணு இயந்திர மாதிரி வாக்கப்பதிவு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா. இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.**

திருப்பத்தூர் மீனாட்சி அரசு மேல்நிலை பள்ளியில் மின்னணு இயந்திர மாதிரி வாக்கப்பதிவு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா. இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்டத்தில், நகர்ப்புற பகுதிகளின் உள்ளாட்சி சாதரண தேர்தல்கள் 2021 நடத்திடும் பொருட்டு, 4 நகராட்சிகளில் உள்ள 126 வார்டுகளுக்கு 299 வாக்குச்சாவடிகள் மற்றும் 3 பேரூராட்சிகளில் உள்ள 45 வார்டுகளுக்கு 48 வாக்குச்சாவடிகளுக்கு தேவையான மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் (EVM) 700 Control Unit-களும் 1400 Ballot Unit-களும் பெங்களூர் பாரத் ஹெவி எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் கம்பெனியை சேர்ந்த தொழில்நுட்ப பொறியாளர்களை கொண்டு, முதல் நிலை சரிபார்த்தல் பணி (FLC) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், 08-11-2021 தேதி முதல் 13-11-2021 தேதி வரை நடைபெற்று முடிவற்றது.

இதில், திருப்பத்தூர் மாவட்டத்திற்கு நகர்ப்புற தேர்தலுக்கு தேவையான 490 Control Unit மற்றும் 980 Ballot Unit-களில் 5% மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (EVM) மாதிரி வாக்குப் பதிவு (Mock Poll) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட் ஆட்சித் தலைவர் திரு.அமர்குஷ்வாஹா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சுமார் 25 நபர்கள் முன்னிலையில் இன்று திருப்பத்தூர் மீனாட்சி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தேர்தல் திரு.செல்வன், நகராட்சி ஆணையர் திரு.ஏகராஜ், ஆம்பூர் நகராட்சி ஆணையர்(பொறுப்பு) திரு.இராஜேந்திரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**